## ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம் - 2013

ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1972 இன் 05 ஆம் இலக்க ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவக அதிகாரச்சட்டத்தின் 24 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

நிதிக்கூற்றுக்கள் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்**

நிறுவகத்தின் மொத்த எரிபொருள் செலவினம், 03 சேவைப் பிரிவுகளுக்கிடையே அங்கீகரிக்கப்பட்ட சதவீதத்தில் பகிர்ந்து கணக்கு வைத்தல் நிறுவகத்தின் கொள்கையாக இருந்த போதிலும் அக்கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான தளபாடமும் உபகரணங்களினதும் பெறுமானத்தேய்வு ரூபா 656,365 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) அமைச்சிற்குச் சொந்தமான 03 வாகனங்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 275,033 தொகையான எரிபொருள் செலவினம் நிறுவகத்தின் எரிபொருள் செலவினமாகக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

கமநல அமைச்சிற்கு மாநாட்டு மண்டப வசதி தொடர்ச்சியாக வழங்கப்பட்டிருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டிற்காகக் கிடைக்க வேண்டிய ரூபா 37,950 தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட 04 கணக்கு மீதிகள் மற்றும் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளின் மீதிகளுடன் ஒப்பிடுகையில் ரூபா 594,069 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவைகளுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| நிதிப் பிரமாணம் 756 | மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) 2004 சனவரி 26 ஆந் திகதிய 2004/புச/01 ஆம் இலக்க தேசிய நூலகம் மற்றும் ஆவணப்படுத்தல் சேவைச் சபையின் சுற்றுநிருபம் | |
| (i) 3.1 ஆம் பந்தி | மீளாய்வாண்டிற்காக நூலகப் பொருட்கள் தொடர்பாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை |
| (ii) 3.2 ஆம் பந்தி | நூலகப் பொருட்களின் பொறுப்பு கையளிக்கப்பட்ட ஒருவர் இடமாற்றம் பெற்றுச் செல்கின்ற போதும் ஓய்வு பெற்றுச் செல்வதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னரும் மெய்மையாய்வு நடாத்தப்பட வேண்டிய போதிலும் முன்னாள் நூலகர் 2013 மே 21 ஆந் திகதி ஓய்வு பெற்றுச்சென்றுள்ள போதிலும் மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டில் நிறுவகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவுகள் ரூபா 14,160,647 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 17,157,210 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 2,996,563 தொகையான அதிகரிப்பைக் காணமுடிந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதியாகவும் பொருளாகவும் பல்வேறு தரப்பினர்களிடமிருந்தான பெறுவனவுகள் மூலதன ஒதுக்கமாக கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அந்த மீதி ரூபா 40,700,838 ஆக இருந்தது. இந்த மானியங்களிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் அதன் பெறுமதிகளை உரியவாறு இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் மூலதன மானியங்களுக்கு பெறுமானத் தேய்விடல் தொடர்பான கணக்கீட்டுக் கொள்கையும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்க வில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மீளாய்வாண்டில் 28 செயற்திட்டங்களையும், 2012 ஆம் ஆண்டில் 14 செயற்திட்டங்களையும், 2011 ஆம் ஆண்டில் 02 செயற்திட்டங்களையும் உள்ளடக்கிய 44 செயற்திட்டங்கள் ஆண்டின் போது அமுல்படுத்தப்பட்டிருந்தது. இதில் மீளாய்வாண்டின் போது 43 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த ஆராய்ச்சிகளுக்குரிய 25 அறிக்கைகளை பகிரங்கப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்திற்கு பாதுகாப்பு சேவையினை வழங்குகின்ற பாதுகாப்பு சேவை நிறுவனத்தின் உடன்படிக்கைக் காலம் கடந்ததன் பின்னர் மேலும் 22 மாத காலத்திற்கு சேவை நீடிக்கப்பட்டிருந்தது. அந்தக் கால எல்லையின் இறுதியில் 18 கனிஷ்ட ஊழியர்களுக்கு ரூபா 110,400 தொகையான சம்பளம் செலுத்தி முறையற்ற வகையில் ஒரு மாதத்திற்கு பாதுகாப்புச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) முன்னாள் பணிப்பாளருக்கு வழங்கப்பட்ட ரூபா 92,090 பெறுமதியான புகைப்படக்கருவி மற்றும் டொங்கல் என்பன நிறுவனத்திற்கு மீளக் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 பதவியணியினர் நிருவாகம்**

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 235 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 164 ஆனமையால் வெற்றிடங்களின் எண்ணிக்கை அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 30 சதவீதமாக இருந்தது.

(ஆ) நிறுவகத்தின் பதிவாளர் பதவி 2011 சனவரி 03 தொடக்கம் கணக்காய்வுத் திகதியான 2014 மே 31 வரை 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் வெற்றிடமாகக் காணப்பட்டது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டின் பாதீட்டு மதிப்பீடு மற்றும் உள்ளபடியான பெறுமதிக்கிடையே முரண்கள் 27 சதவீதம் தொடக்கம் 347 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. அதன் பிரகாரம் பாதீடு வினைத்திறனான நிதிக்கட்டுப்பாட்டுக் கருவியாக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

**5.2 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உலக உணவு செயற்திட்டத்திற்குரிய ஒரு வாகனம் 2011 ஆம் ஆண்டில் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட வாகனத்தின் சட்டரீதியான உரித்து கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 இல் நிறுவகத்தில் சேவையாற்றிய இரண்டு உத்தியோகத்தர்களுக்காக 02 வருடங்களுக்கு சம்பளத்துடனான கற்கை விடுமுறை நிறுவகத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அவர்கள் கற்கை நடவடிக்கைகளை உரியவாறு பூர்த்தி செய்யாமையின் காரணமாக கற்கை கால எல்லை 2013 நவம்பர் 30 ஆந் திகதி வரை நீடிக்க வேண்டியேற்பட்டது. அதற்காக புதிய பிணையாளர் கையொப்பமிட வேண்டியமை 2013 ஆகஸ்ட் 15 ஆந் திகதிய உதவிப் பதிவாளரின் (நிகழ்ச்சித் திட்டம்) கடிதத்தில் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் புலமைப்பரிசில் பெற்றவர்கள் புதிய பிணை கையொப்பமிட்டோ அல்லது கற்கை நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டோ இருக்கவில்லை.

(இ) வெளிநாட்டு பல்கலைக்கழகத்தின் பட்டப்பின்படிப்பு பாடநெறியைப் பின்பற்றிய உடன்படிக்கையை மீறிய 05 புலமைப்பரிசில் பெற்றவர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதில் ஏற்பட்ட தாமதத்தின் காரணமாக

மீளாய்வாண்டின் இறுதியின் போது அறவிட வேண்டிய பிணைமுறிப் பெறுமதி ரூபா 10,651,222 ஆக இருந்தது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான பலவீனங்கள் அவ்வப்போது நிறுவகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிதி நிருவாகம்
(ஆ) ஆராய்ச்சி செயற்திட்டம்
(இ) சொத்துக்கள் நிருவாகம்
(ஈ) பதவியணியினர் நிருவாகம்